In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.163/2023 Prosecution witness P.W.19

Name: Sankar Kumar Calling:

Father Name: Religion:

Village: Caste:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 22-07-2025.

**(A1 produced on V.C. A2 died. A3 to 9 absent.petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் தற்போது சென்னை தடய அறிவியல் பிரிவில் போதைப்பொருட்கள் பிரிவில் உதவி இயக்குநராக பணியாற்றி வருகிறேன். நான் திண்டுக்கல் மாவட்டம், இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் (பொறுப்பு) இருந்தபோது கடந்த 28.07.2023 ம் தேதியன்று காவல் கண்காணிப்பாளர் அவர்களின் தனிப்பிரிவு மற்றும் காவல் ஆய்வாளர், திண்டுக்கல் நகர் வடக்கு ஆகியோர்களின் வேண்டுகோளின்படி அன்றைய தினம் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்திற்கு சென்று அதன் பின்பு காவல் ஆய்வாளர், காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்களின் முன்பு சிட்டி மருத்துவமனை பின்புறம் உள்ள காலியிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த TN-57-4655 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு நிற ஷிப்ட் மாருதி வாகனத்தை ஆய்வு செய்யக்கோரியதை ஏற்று காவல் ஆய்வாளருக்கு அறிவியல் பூர்வமாக உதவி செய்யும்பொருட்டு வாகனத்தை ஆய்வு செய்ததில் வாகனத்தின் இடதுபுற கதவின் வெளிப்புறம் மற்றும் உட்புறம் வாகனத்தின் பின்புறம் உள்புறம், வெளிப்புறம் இரத்தக்கறை இருந்தது. அதனை பேன்டேஜ் துணியில் Swab எடுக்கப்பட்டது. மேலும் வாகனத்தின் இடது முன்புறம் சீட்டின் உட்காரும் இடத்தில் தலைவைக்கும் இடத்திலும், பின்புறம் இடதுபுறம் உட்காரும் சீட்டில் தலை வைக்கும் இடத்திலும் இரத்தக்கறை இருந்தது. சீட்டின் தலைவைக்கும் பகுதியை தனியாக எடுத்து உயிரியல் பகுப்பாய்வு செய்வதற்காக காவல் ஆய்வாளருக்கு உதவியாக எடுக்கப்பட்டது. காவல் துணை கண்காணிப்பாளர் என்னை இது சம்மந்தமாக விசாரணை செய்தார்.

1 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை—

காவல்துணை கண்காணிப்பாளரிடமிருந்தோ, ஆய்வாளரிடமிருந்தோ இது சம்மந்தமாக எழுத்து மூலமாக எந்தவித வேண்டுகோள் கடிதமும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் 20 மாதகாலம் திண்டுக்கல் தடயவியல் ஆய்வகத்தில் பொறுப்பு அதிகாரியாக பணியாற்றி வந்தேன். அந்த காலகட்டத்தில் தேனி மாவட்டத்தில் பணியாற்றி வந்தேன். திண்டுக்கல்—திருச்சி மெயின்ரோட்டில் சிட்டி மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். அந்த மருத்துவமனைக்கு பின்புறம் காலியிடம் கிடையாது என்றால் சரியல்ல. மருத்துவமனையிலிருந்து எவ்வளவு தூரத்தில் அந்த காலியிடம் இருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. பேன்டேஜ் துணியை வைத்து இரத்தக்கறையை Swab செய்தது குறித்து காவல்துணை கண்காணிப்பாளருக்கோ, ஆய்வாளருக்கோ எழுத்து மூலமாக அறிக்கை செய்யவில்லை என்றால் சரிதான். காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது 1 வது எதிரி வந்தது அடையாளம் காட்டியபின்பு நான் ஆய்வு செய்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் காவல்துறையின் பணிபுரிந்துவந்ததாலும், காவல் துணை கண்காணிப்பாளர் கேட்டுக் கொண்டதாலும் நான் எவ்வித ஆய்வும் செய்யாமல் ஆய்வு செய்தததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை — இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.07.22 15:11:48 +0530

Principal District Judge,
Dindigul.